பள்ளிக் கல்வி ஆணையரகம்

பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) அவர்களது செயல்முறைகள், சென்னை-6.

பிறப்பிப்பவர் திரு.பொ.பொன்னையா, M.sc., M.A.,M.Ed

ந.க.எண்.27199/ஜே/இ2/2021 நாள் 01.09.2021.

13 SEP 2021

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி கருணை அடிப்படை நியமனம் – நாகப்பட்டினம் மாவட்டம். அக்கரைபேட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து 27.05.2004 பணியிடை மறைந்த திருமதி.C.ஜெயந்தி என்பவரின் வாரிசுதாரர் திரு.வி.அந்தோணி ரஞ்சன் பிரகாஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் நியமனம் செய்யப்பட்டது – 04.10.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து – ஆணையிடல்.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யு1)துறை நாள் 26.02.2021.
3. நாகப்பட்டினம் முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.13112/அ1/2020 நாள் 09.04.2021.

------

ஆணை :-

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, திரு.வி.அந்தோணி ரஞ்சன் பிரகாஷ் என்பவர் இளநிலை உதவியாளராக நாகப்பட்டினம் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.5860/அ1/2018 நாள் 03.10.2018–ன்படி 04.10.2018 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக் கல்வித் துறையில் தற்காலிகமாக

பணியமர்த்தப்பட்டுள்ளார். தற்காலிகமாக பணி அமர்த்தப்பட்டவரின் தாயார் திருமதி.C.ஜெயந்தி என்பவர் நாகப்பட்டினம் மாவட்டம், அக்கரைபேட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்த போது பணியிடையில் 27.05.2004 அன்று காலமானார் என்றும், அவர் தகுதிகாண் பருவம் முடித்தவர் என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.வி.அந்தோணி ரஞ்சன் பிரகாஷ் என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு 12.12.2006 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 02.05.1985 என்றும், அவர் இடைநிலைக் கல்வி (எஸ்.எஸ்.எல்.சி) பள்ளியிறுதி வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்கு பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் பார்வை 3-ல் குறிப்பிட்ட கடிதத்தில் நாகப்பட்டினம் முதன்மைக் கல்வி அலுவலர் தெரிவித்து, அன்னாரின் பணியினை வரன்முறை செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்கண்ட நிலையில், நாகப்பட்டினம் முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையின் அடிப்படையில் நாகப்பட்டினம் மாவட்டம், அக்கரைபேட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்த திருமதி.C.ஜெயந்தி என்பவரின் வாரிசுதாரர் திரு.வி.அந்தோணி ரஞ்சன் பிரகாஷ் என்பவர் பார்வை 2-ல் உள்ள அரசாணையில் நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ள நிலையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் 04.10.2018 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் அவரது பணியினை அப்பணியிடத்திற்குரிய உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவர் பணியில் சேர்ந்த நாளான 04.10.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடுகிறது.

நிபந்தனைகள்:

1. தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள் 32எ (1)-ன்படி இளநிலை உதவியாளர் பதவியில் தொடர் மூன்றாண்டு காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டும்.
2. தகுதிகாண பருவ காலத்தில் இரண்டாண்டுக்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு மற்றும் பவானி சாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும்.

இவ்வாணை குறித்து உரிய பதிவுகள் சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

இணைப்பு: அசல் கல்விச் சான்றுகள் மற்றும் பணிப்பதிவேடு

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

9/9/2021

பெறுநர்,

திரு.வி.அந்தோணி ரஞ்சன் பிரகாஷ்,
இளநிலை உதவியாளர்,
நகராட்சி (மகளிர்) மேல்நிலைப் பள்ளி,
நாகப்பட்டினம் மாவட்டம்.(முதன்மைக் கல்வி அலுவலர் மூலமாக)

நகல்: முதன்மைக் கல்வி அலுவலர்,
நாகப்பட்டினம்.

நகல்: கோப்பிற்கு.